உ

கடவுள் துணை.

மதுரைமீனாட்சியம்மன்

# சோமசுந்தரக்கடவுள்பேரில் அடிமடக்கு ஆசிரியவிருத்தம்.


திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது



மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

# மதுரை
# மீனாட்சியம்மன்
## அடிமடக்கு ஆசிரியவிருத்தம்.

கதியானைக் குழலணிமா கதியானை யடியருளங்கலங்கத் தான்சம், மதியானைக் சுயவர்பணி மதியானை மண்ணும் விண்ணும் வணங்குமாசங், நிதியானை யளக்கரிய நிதியானைப் பொய்யன்பர் நினைவிற்றன்பூள், பதியானைத் திருமதுரைப் பதியானைத் பணிவார்தம் பவமற்றேரே.

வாரானை வீணரெதிர் வாரானைத்தன்றானை வணங்காரைக்கண், பாரானைத் தென்பாண்டிப் பாரானைப்பொய்யன்பர் பணிக்குமுத்தி, தாரானைநிம்பமலர்த் தாரானை மதயானைத் தடக்கைவாழை, யூரானைத்திருமதுரை யூரானையுள்ளுமென துள்ளமாதோ. (உ)

பரத்தானையடியவர்தா பரத்தானை யங்குசவெம்பாசமேந்தும், கரத்தானை மந்த்ரபஞ்சாக கரத்தானை முத்தேவர்கட்குமேலாந், தரத்தானையிலங்குசவுந் தரத்தானை விண்முடியைத்தடவும் பொற்கோபுரத்தானைச் சீவன்முத்தி புரத்தானை நினைத்திடுமென் புந்திமாதோ. (௩)

சேயாளைச் செழியனருள் சேயாளைப் பல்லுயிருஞ் செகத்துந்தானே, ஆயாளையடியர்பிழையாயாளைப்பொய் யன்ப ரணிதாரைத்தாள், வேயாளை தோட்பசிய வேயா ளைச் செம்பவளம் விளங்குமாம்பல், வாயாளைத் திருவா லவாயாளைத் தூயாளை வணங்கிவாழ்வாம். (௪)

கலையாளை யணிமணிமே கலையாளைக் கன்னிபுரங் காத்தமோலித், தலையாளைக் கிளிமொழிக்கு தலையாளை மரகதத்தாற் சமைந்தசோதிச், சிலையாளைக்கரும்புருவச் சிலையாளை யெனையாளச் சித்தஞ்சற்றும், மலையாளைப்பங் கமர்செம் மலையாளை பணிந்துபவமாற்றுவாமே. (௫)

பரையாளைப் பங்குறைநம் பரையாளைவடிவாளைப் பரவார்க்குள்ளங், கரையாளை வைகைநதிக் கரையாளை முக்கனிகற்கண்டுசெந்தேன், உரையாளையானேவவுரை யாளையன்பர்பவத் துழன்றுவாட, வரையாளைத் தனிமி மய வரையாளைப் பணிபவரே மாசற்றாரே. (௬)

தவியாளைத் தொண்டருக்கு தவியாளைக்கயவர்குடி தாங்கச்சிந்தை, கவியாளைமூவரிசைக் கவியாளைப்பிரளய த்துங்கற்பத்துந்தான், அவியாளைமகத்தூட்டு மவியாளை விழிக்கடைசென் றடர்ந்துபாயுஞ், செவியாளை யெமை யாளுஞ் செவியாளைக் கணந்தோறுந் தியானிப்பாமே.

அணியானை முடிபணியாம் பணியானை மணித்தோளுக் கணிந்தநிம்பக், கணியானைக் கயவர்தொண்டு கணியானை முத்தேவர் களையுமேவும், பணியானை விளங்குதிருப் பணியானைத்திருமதுரைப்பாண்டிக்கோன்கண், மணியானைப் புனைந்துகவ மணியானைப் பணியார்நன்மதியற்றாரே. (அ)

துய்யானை மகவரிந்துந் துய்த்தானைப் பெருங்கருணை சுரக்குங் கட்பார், வையானைத் தாளென்முடி வைத்தானை மரகதமா மலைபோல் வாய்த்த, மெய்யானை மூவர்தமிழ் மெய்த்தானைச் சுவைக்கருப்பு வில்லொன்றேந்துங், கையானை மடங்கலையு கைத்தானைத் துதித்துவினை கட்டுவாமே. (கூ)

கெலியானை யெண்டிசையுங் கெலித்தானை யயன்றலைக் கேந்தியேற்ற, பலியானை யடிவர்க்கே பலித்தானை மதுரைவரப் பணித்தவேழார் வலியானை யெவ்வுயிருங் கலித்தானை யடியேனைக் காக்கச்சற்றுஞ், சலியானைக் கணவனுக்கஞ் சலித்தானைத் தஞ்சமெனச் சரண்புக்கேனே. (ம)

மீனாட்சியம்மன்

அடிமடக்கு ஆசிரியவிருத்தம்.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

மதுரை

# சோமசுந்தரக்கடவுள்

## அடிமடக்காசிரியவிருத்தம்.

விடையானைச் சனகர்வினவிடையானை யெனைப் பிறவி வேலைசாரப், படையானை வெற்றிமழுப்படையானை யடியரைத் தாபரிக்கநெஞ்சஞ், சடையானைச் செம்பவளச் சடையானை வரிவேங்கைச் சருமம்பூண்ட, உடையானைத் தென்கூடலுடையானை மறவாதென் னுள்ளமாதோ. (௧)

வாட்டானைத் தசமுகனைவாட்டானைத் தொண்டரைவன் னரகிலென்றும், வீட்டானைப் பரமபதவீட்டானை முனிவருக்கா வெள்ளிமன்றுள், ஆட்டானை யெனைக்கலியி லாட்டானை யந்தகனையடியார் கண்ணிற், காட்டானை மதுக்கடப்பங் காட்டானைக் கருதிவினை கடத்துவேனே. (௨)

சுகத்தானை வாம்பரியஞ் சுகத்தானை யெரித்தானைச் சுடரார்வெள்ளி, நகத்தானை நறுங்கோக நகத்தானைத் தடிந்தானை நாலோடொன்று, முகத்தானையடியவர்ச மு

கத்தானைத் தனைப்பாடு முதன்மைத் தொண்டற், அகத் தானைத் தென்மதுரை யகத்தானைப்பணியடியார்க் கடியேன்யானே. (௩)

மையானை யுரித்தவலி மையானைத் திரிசூல மழு மானேந்தும், கையானைச் சரணருளங் கையானைப் பணியார்க்குக் கருணைநாட்டஞ், செய்யானைத் திருமேனிச் செய்யானைத் தென்கூடல் செழித்தபூதி, மெய்யானைத் தனி முதலா மெய்யானைப் பணிந்துபழ வினைவெல்வேனே. (௪)

நலத்தானைக் கரமேந்தனலத்தானைச் சடைமுடிமே னண்ணுங்கங்கா, சலத்தானைச் சிலைக்கனகா சலத்தானைத் தீரனெதிர் சாற்றுஞ் செஞ்சொல், வளத்தானை மலைமடந்தை வலத்தானை வளமிகுது வாழ்மாநகத், தலத்தானைத் தழனுதற்கட் டலத்தானைக் கண்களிப்பத் தரிசித்தேனே. (௫)

வண்ணானை யேறியசெவ் வண்ணானை யிரவியங்கி மதியாமூன்று, கண்ணானை யன்பர்பிழை கண்ணானை வஞ்சநெஞ்சக் கயவர்காண, வொண்ணானை நான்மறைக்கு மொண்ணானை யெனையினுமோ ருதாஞ்சேரப், பண்ணா

னே யிருவரிசைப் பண்ணனே யென்னுளும் பணிசெய் வேனே. (சு)

முடியானைத் தும்பைமலர்முடித்தானைத் திருமேனி முழுதுநீற்றுப், பொடியானைக் காமனுடல் பொடித்தானையிடத்திமயப் பொருப்பார்பச்சைப், பிடியானை வெற்றிமழுப் பிடித்தானைத் தன்னிலமை பேசுமாலங், குடியானைக் கடல்விடமுன் குடித்தானைத் துதித்திருமை குவித்துவாழ்வாம் (எ)

விரியானை நான்மறையும் விரித்தானைத் தனைத்தானே விரும்புமன்பர்க், குரியானை மதயானை யுரித்தானை யெவ்வுயிர்க்கு முயிர்தானுகுங், கரியானைக்காமனுடல் கரித்தானைப் பொய்யன்பர் கண்முன்வந்தா, தரியானைப்பிறைமௌலி தரித்தானைக் கூடலிடைத் தரிசித்தேனே (அ)

கல்லானை கரும்பருந்தக் கற்றானைப் புரம்பொடிய கனகமேரு, வில்லானை வளையெடுத்து விற்றானை வெஞ்சமணர் விடுக்கவந்த, கொல்லானைத் தன்விடையாற் கொன்றானை நான்மாடக் கூடலாக்குஞ் செல்லானைப் பரவையிடஞ் சென்றானைக் குன்றானைத் தியானிப்பாமே. (கூ)

ஏறானைப் பலியுலகி லேற்றானை முருகனைத்தந்திட
வாஞ்சென்னி, ஆறானைச்சடையிலணி யாற்றானைபஞ்செ
ழுத்தை யன்பிலார்க்குக், கூறானையுமையவளோர் கூற்றா
னைபெனையடிமை கொள்ளுஞ் செய்கை, மாறானைவஞ்சர்
பவமாற்றானை நீற்றானைவாழ்த்துவேனே. (௰)

## சோமசுந்தரக்கடவுள் மீது

### அடிமடக்காசிரியவிருத்தம்.

### முற்றிற்று.